| | | | |
|---|---|---|---|
| Headline | 25 years on, unsafe 'bridge in the sky' to come down | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 02 Jul 2017 | Color | Full Color |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 3 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 58 cm² |
| Journalist | NULL | AdValue | RM 337 |
| Frequency | Daily | PR Value | RM 1,012 |



# புயலினால் சேதம்; தொங்கு பாலம் தற்காலிகமாக மூடப்படுகிறது



கோலாலம்பூர், ஜூலை 2-

மலேசிய வன ஆராய்ச்சி மையத்தில் இருக்கும் கால் நூற்றாண்டு பழைமையான தொங்கு பாலம் மறுசீரமைப்புப் பணிக்காக தற்காலிகமாக மூடப்பட்டது.

1992ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தத் தொங்கு பாலம் மலேசியாவில் மிகவும் பிரசித்திபெற்ற பாலமாகும். இயற்கை அழகை ரசிக்கவும் காடுகளைச் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் மக்கள் இந்தப் பாலத்தைப் பயன்படுத்துவதுண்டு. இப்பாலம் கடல் மட்டத்திலிருந்து 300 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இது 150 மீட்டர் நீளம் கொண்டது.

பொதுவாகவே ஒரு தொங்கு பாலத்தின் ஆயுள் கால்நூற்றாண்டு அல்லது இன்னும் ஓரிரு ஆண்டுகள் வரை தாக்குப் பிடிக்கும். ஆனால், எண்ணிலடங்கா சுற்றுலாப் பயணிகளாலும் புயலின் தாக்குதலாலும் இந்தப் பாலம் மிகுந்த சேதம் அடைந்துள்ளது. குறிப்பாக, 2015இல் ஏற்பட்ட புயல் தாக்குதலால் இந்தப் பாலத்தைத் தாங்கிப் பிடித்திருக்கிற மரங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு விட்டதால் உடனே சீரமைப்பு செய்ய வேண்டும் என்று சுற்றுச்சூழல், நகர்ப்புற வனவியல் திட்டத் தலைவர் டாக்டர் நூர் அஸ்லின் கூறினார்.

விடுமுறைக் காலங்களில் காலை 9.30 மணி தொடங்கி பகல் 2.30 மணி வரையிலும் ஒரு நாளைக்கு சுமார் 250 சுற்றுலாப் பயணிகள் வரை இந்தப் பாலத்தில் நடக்க அனுமதிப்பட்டனர். ஆனால், புயலின் பாதிப்புக்குப் பிறகு அந்த எண்ணிக்கையை 100 ஆகக் குறைத்து விட்டதாக அவர் சொன்னார்.

புதிதாகக் கட்டப்படும் தொங்கு பாலத்திற்கு உலோகத்தில் செய்த தூண்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இதனால் இனி மரத்தின் உதவியை நம்பி இருக்கத் தேவையில்லை எனவும் அவர் கூறினார்.

Powered by: